நாள் 03.03.2020

<u>சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு.</u>

**REA.No.189/2017 in REP.No.36/2013**

**ம.சா.1 ( கோபால்)**

**குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வரவில்லை. என்னை சாட்சியம் அளிக்க ராஜவேலு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. பாவாயி தான் அழைத்து வந்தார். பாவாயி என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்தார். தற்போது மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயாரிக்கப்பட்டது தான். இந்த வழக்கு யார் மீது யார் தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் 3 வருடங்களாக வாடகைக்கு இருக்கிறேன். எங்களுக்குள் வாடகை ஒப்பந்த பத்திரம் எதுவும் எழுதி நான் அதில் கையெழுத்து போடவில்லை. பாவாயி, மல்லிகா ஆகியோர் தான் மனுச்சொத்தின் உரிமையாளர் என்று சொன்னதால் நான் அவர்களிடம் அட்வான்ஸ் கொடுத்துவிட்டேன். பாவாயியும், மல்லிகாவும் எனக்கு தெரிந்து 3 வருடங்களாக மனுச்சொத்தில் தான் குடியிருக்கிறார்கள். ராஜவேலு இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். ராஜவேலுக்கு மனுச்சொத்தில் உரிமை உள்ளதா என்று எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாணவாக்குமூலம் பத்தி 3ல் பாவாயி மற்றும் மல்லிகாவும் 4751 உள்ள இடத்தினை அவரது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருப்பதாக சொல்லியுள்ளேன். அந்த 4751 என்னவென்று எனக்கு தெரியாது. நான் சொல்வது பொய் என்றாலும் ராஜவேலு என் நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாவாயியும், மல்லிகாவும் தான் உண்மையான உரிமையாளர்கள் என்று நான் சொல்வது தவறு என்றாலும் ராஜவேலு தான்

உண்மையான உரிமையாளர் என்றால் சரியல்ல. ராஜவேலு தான் உண்மையான உரிமையாளர் என்று பாவாயும், மல்லிகாவும் சொல்லியுள்ளதற்கு முரண்பட்டு நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/- கோபால்

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/-S.Syed Barkathullah,
Subordinate Judge,
Tiruchengode.